# வீரமாமுனிவர் பதிப்பு 1900

LB
NDO
114323

1900

1940

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
27 AUG 1940
MADRAS

உ

கடவுள்துணை

# வீரமாமுனிவர்

அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

## இரணவாகடம்

நூல்.

இவை-மதுரை-புதுவை-சென்னை

இச்சங்கங்களில் தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய

களத்தூர்

வேதகிரிமுதலியார் - குமாரன்

ஆயுள்வேதபாஸ்கரன்

கந்தசாமிமுதலியார்

அவர்கள் முன்னிலையில்

தஞ்சமாநகரம்

மெடிக்கல்-பிரக்டிஷனர்

## வேங்கடாசலப்பிள்ளை

அவர்களால்

பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு

சீர்திருத்தி

மேற்படி முதலியாரது
இலக்கணக்களஞ்சிய அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது
[illegible]

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
27 AUG 1900
MADRAS.

LB
NO
114393

## இந்நூல் அச்சிட்ட கிரந்தகர்த்தாவுடைய

## விஞ்ஞாபனம்

மாட்சிமைதங்கிய அன்பர்களே இவ்வுலகத்தின்கண் நாற்பத்தெண்பேர் முனிவர்களும் பதினெண் சித்தர்களும் நவகோடிரிருடிகளும் தங்கள்தங்கள் ஜீவகாருணியத்தினால் இருபத்தொரு லட்சம் கிரந்தங்கள் செய்திருக்கிறதாக முன்னோர்கள் சொல்லிய வாக்கியப்படி ஆயுள்வேதபண்டிதர்கள் அனேகவாக்கியார்த்த கிரந்தங்களை பாடலாகவும் வசனரூபமாகவும் அச்சிட்டிருக்கிறார்களல்லவா ஆயினும் இரணவாகடம் என்னும் வீரமாமுனிவரவர்களால் செய்யப்பட்ட இந்நூலை எவர்களும் எனக்குத் தெரிந்தவரையில் அச்சிடாமலிருக்கிறபடியால் என்பிதாமூலமாய் தேடிவைத்திருந்த இந்நூலை யான் என்னிடத்தில் வெகுநாளாக வைத்துக்கொண்டிருக்கும் ஏட்டுப்பிரதியை ஆயுள்வேதபாஸ்கரர்-கந்தசாமிமுதலியார் அவர்கள் முன்னிலையில் சீர்நோக்கி உலகத்திலுள்ளோர் இரணமருந்தறியும்பொருட்டு இந்நூலை அச்சிடத்துணிந்தேன்.

இப்படிக்கு.

தங்கள் நண்பன்

மெடிக்கல் பிரக்டிஷனர்-த-வேங்கடாசலப்பிள்ளை.

## விளம்பரம்.

இதனால் சகலமானபெயர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் சென்னப்பட்டணம் - கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு (௱௮௨) வது நெம்பர்கிரகத்தில் ஸ்தாபித்திருக்கும் வயித்தியசாலைக் கதிபதியாகிய-மெடிக்கல் பிரக்டிஷனர் த - வேங்கடாசலப்பிள்ளை அவர்களிடத்தில் இந்த வீரமாமுனிவர் இரணவாகடத்தை கையொப்பக்காரர்களின் விதிப்படி புத்தகம் ஒன்றுக்கு அணா-௨-வீதம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம் பத்து புத்தகம் எடுப்பவர்களுக்கு ஒருபுத்தகம் கமீஷன் கொடுக்கப்படும்

இப்படிக்கு

தங்கள் நண்பன்


மெடிக்கல் பிரக்டிஷனர்

த - வேங்கடாசலப்பிள்ளை

4

## விளம்பரம்

இப்போது தேகதத்துவசாஸ்திரமென்னும் ஓர் பெருநூல் அச்சிற் பதிப்பித்துக்கொண்டு வருகிறது முற்காலத்தில் ஈசனிடத்திருந்துபெற்ற சாரீரசாஸ்திரத்தை சரக சுசிஸ்ருதி முதலோரான எழுதிய பெருநூல்களில் வயித்தியபண்டிதர்கள் சாரீரவியாபாரமறியாமல் வயித்தியஞ்செய்வது பாபத்திற்கிடமாகுமென்று கண்டு வயித்தியத்துடன் உடற்கூறிலக்கணத்தையுங் கூறினார்கள் அக்கிரந்தங்கள் அபூருபமாகிய வயித்தியர்கள் அனேக உடற்கூறிலக்கணம் படியாமலே வயித்தியஞ்செய்யத் துணிந்திருக்கிறார்களென்று சகலருக்கும் தெரிந்ததே இது பண்டிதர்பேரில் சொல்லக்கூடிய குற்றமல்ல நூல்கிடையாத காரணந்தான் இக்குறைவைநீக்க இந்நூலை பிரசுரப்படுத்த யோசிக்கிறோம் கையொப்பக்காரருக்கு விலை ரூபா (௨) கைவிலைக்கு ரூபா-௩-ம் வேண்டுபவர்கள் மேற்படி டாக்டருக்கு யெழுதிக்கொள்ளலாம்





OFFICE OF THE REGISTRAR
REGISTERED
27 AUG 1900
MADRAS.

கடவுள் துணை.

மகாமகுத்துவம்பொருந்திய

# வீரமாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# இரணவாகடம்

நூல்.

காப்பு.

விருத்தம்.

ஒருநுமண்டப் பரப்பெலாமொளிரு
மேகநாயகனருள் வாய்ந்த
சீருறசிந்து சூழலின்கண்
ஜெனித்திடு மாக்களுக்குற்ற
பேருறுரணங்க ளகன்றிடப்புவியிற்
பேசுமிவ் வாகடநூறும்
வீரமாமுனிவனெனும்பெயருடையேன்
விரித்தன லகமகிழ்வீரே. ௧

கடவுள் துணை.

ஆராதபுல்லர்களுக்கு - மூலாம் - விருத்தம்

சாரச்சாம்பிராணித் துத்தந் திருந்துங்கருத்த குங்கிலியம்
ஏரார்வகைகள் தான்களஞ்சு மிலிங்கு துருசு காற்களஞ்சு
ஆரார்பச்சைவெட்டுடனே வகைநாற்பலமுந்தாள்ளென்று
பாரார்கல்வத்தினிலிட்டு நன்றென்னெனயிலரைத்துத் தகம்விடே ௨

௦ உதகமென்பது - தண்ணீரெனப்படும்

ஏழுமூன்று - தண்ணீர் கழுவவேண்டியது

விட்டேகழுவி வழித்தெடுத்து வேண்டுஞ்சீலை தனிலூட்டி
நிட்டேரணங்கள் தின்கிளருந் தீரா ரோகபீருங்கே
கட்டவாய்ப்புண்கள் அழற்றீங்கு சலதுப்பாங்கு காற்புந்து
மட்டார் அம்பெண்ணரசேமாய்ந்து ஒழிந்துபோய்விடுமே

கிரந்திக்கு மூலம்

சதைதகரைக்க

போமேவளர்ந்த சதைவெள்ளைப் பொருந்துந் தாரங்காசொன்று
ஆமேதுருசுமீரிரண்டு வழிவாய்சுண்ணமுவிரண்டு
தாமேசிவந்த சங்கிலிபக் கரித்தவிதாளமுடன் கூட்டி
வாமேவரைப்பீரெள்ளெண்ணெய் மதிக்கச் சலத்திற் றனிற்கருவே ௪

கழுவியெடுத்துத்துணியிலிட்டுக் கரையாவழிப்புண்மீதிடவே
வளமாய்வளர்ந்த சதைமுனையு மாருப்புண்ணுமழிகிரந்தி
தளமாருஞ்சூலைவெடிநாசந் தானே போகும் பாருமடி
பழமாஞ்செவ்விமுலையாளே பாசமுடனே கேள்டிருமானே

பச்சைசேர்வைச்சீலை

மானேலிங்கங்களஞ்சொன்று மதிக்குந் துருசுமிருகளஞ்சு
தேனேமிருதார்களஞ்சு திராமிரதங்களஞ்சியம்
ஊனேபலமுமுன்றாக வுற்றவெள்ளெண்ணெயுடன்றானே
ஆனேயரைத்துச் சலமதனில் அடவாய்க்கலக்கி வழித்திடுமே ௫

இடுமேசீலைதனிலூட்டி யேற்றரத்தசிக்கிதனில்
ஒடுமேசிக்கிபுடனுரைக்கு முப்பையமுளையாறுந் தானேரும்
நடுமேபரந்திக்கிரந்தியுடன் நடிப்புத் தழுமிருப்பீர்ப்பாய்ச்சல்



வேறு - பச்சைசேர்வை

வெண்மைகெவுரி அரிதாரம் வேண்டுமஞ்சள் நீலமுடன்
மண்டுவகைக்கு களஞ்சொன்று வளமாய்ப்பச்சைபலமிரண்டு
விண்டுமறைக்குமெள்ளெண்ணெய் விதமாய்ச் சலமும்விட்டரைத்து
கண்டுவழித்துத் துணியிலிட்டு கதித்தரணத்தின்மேற்போடே ௬

போட்டால் திங்கிப்பிளவையறும் பொருந்துஞ்சதைகள் முளைநாசம்
ஆட்டார் குத்து அரணையறும் ஆறாரணங்கள் நீருகும்
பாட்டால் தொகுந்த விஷம்பேரும் பறக்கவடிக்கும் ரணங்களையும்
வாட்டவல்ல பச்சையிதை மகிழ்ந்து வரைத்தே நீமாதே ௭

வேறு - பச்சை

மாராங்கெவுரிமிருதாரு மதிக்கக்களஞ்சொவ்வொன்று
சேரந்துருசு யிரண்டு சேரவதைக்கு வெள்ளெண்ணை
காராங்கூட்டியே யரைத்து கலந்தகளுப்போடின்னமொரு
தாரங்கூட்டுமடமானே சரியாப்பீரிற் கழுவிடுமே ௮

கழுவியெடுத்த களிம்பதனைக் கதிக்கசீலைத் தனிலூட்டி
உழுவாய்வளர்ந்த சதையதனி லூனைக்கரைக்கவுட்சதையும் (வை
மழுவும்பலாக்காய் தொடைச்சதையும் வசையாம்பரங்கிமார்பிலை
இழுகுங்கருங்கண்குழலாளே யியல்பாய்ரணங்களஞ்சிடுமே ௯

அஞ்சுபட்டியிலிருகமுடன் அதித்த வெள்ளைமிருதாரம்
பஞ்சவகைகள் தான்களஞ்சு பட்டிருந்திருசுவகைகளஞ்சு
செஞ்சம்பெருத்த சுண்ணம்பு சிகரிற்பல்முந்தாளென்று
மஞ்சம்பெருத்த பச்சைவெட்டு மதிக்கப்பலமுந்தானிரண்டே ௰

கஞ்சா

ரெண்டேயெள்ளினெண்ணை தனில் சேரயரைத்து நீர்விட்டுப்
பண்டேபருத்தசீலைதனிற் பருக்கப்பூசி மேற்போடில்
கண்டேசூலைகடுக்கிரந்தி கடியபிளவை கமலக்காய்

அறையாப்புக்குக்கரும்பு

போமேவெள்ளைகெவுரியுடன் பொருந்துஞ்சூதமரிதாரம்
ஆமேமிருதார்சிங்கியுட னவகைகடான்களஞ்சு
சாமேவெட்டுப்பலநாலுந் தாக்குருக்கிலியம்பலமொன்று
நேமேயென்னெய் தனிலரைத்து நேராய்ச்சலத்திற்கழுவிவிட்டே ()

பச்சைவெட்டு

எடுத்தச்சீலைதனிலூட்டி. வழிலாப்புராங்கிக்கடி விஷமும்
அடுக்கருலையறையாப்பு மானபிளவைபவுத்திரமும்
விடுத்தவிஷங்களரவமுடன் வீணேகுட்டம்வெடிஜன்னி
கடுத்தபணிச்சைமண்டைகம் தரிக்காதேயப்போய்விடுமே ௰௭

ஏழுமுறைதண்ணீரில்கழுவவும்

கொழுக்கரும்பு

ாமேக்குக்கிற்றுருசுதுத்தம் பொருந்துமிரதங்கற்பூரம்
தவிவாவின்பிசினுடனே வகைக்குப்பலங்காலாய்
மபொருந்தபச்சைவெட்டு விதமாய்ப்பலமுந்தானிரண்டு
தேமெவறைக்குமென்னெண்ணெய்ச் சேரநீரிற்கழுவிடுமே ௰௮

கழுவியெடுத்தக்கரும்பதனைக் கறித்தவத்திரந்தனிலூட்டி
மழுவிவிளைந்தபலாத்தோடேவளரும்பருத்தபரங்கியுடன்
வழுவைக்குறைக்கும்பரிசிங்கி வர்காப்பிளவைபவுத்திரமுஞ்
செழுவிவல்லவிரணங்கள் தெறிப்போமென்றுசொல்லிடுமே ௰௯

வேறு

சொல்லுந்துத்தம்கிப்பிலியுடன் துருசுமிருதாரிதாரம்
வல்லப்பருத்தவகையொன்று மதிக்கப்பலமுங்காலாகச்
சொல்லும்பச்சைவெட்டுடனே சுகமாய்ப்பலமுமூன்றாக
அல்லும்பருத்தருமலர்ச்சோலைக்கப்பதென்னெய்யெண்ணெயிதேஅ

தண்ணீர்வடியுந்தரிசிங்கி சாற்றுந்தரியாக்கிரந்தியுடனென்னும்பெரியசெச்சையுடனுங்குழலபவுத்திரமுங்
கண்ணிக்குரங்கிகடிவிஷமுங் கமலப்பிளவைத்துடைவாழை



கிரந்திக்கும்-யோனிப்புத்துக்குங்-காரசிலை

ஓடும்பச்சைசேர்வைக்கு வுதித்தநீலமரிதாரம்
பாடும்வகைக்குப்பலமரைதான் பகரும்படியேவீரிரண்டு
நீடாதறைப்பதெள்ளெண்ணெய் சீலைக்கத்தண்ணீர்விட்டறைத்து
ஆடுமரவப்படத்தல்கு ளரிவைமருந்தைதனிலூட்டே ௨௰

ஊட்டியெடுத்துப்புண்ணிலிட வுதிரகிரந்திவுள்வீக்கம்
ஈாட்டும்பெரியநாய்முள்ளும் நசுவர்கிரந்திகருட்குன்றி
ஆட்டுங்கிரந்தியரிகிரந்தி யாருப்புண்கள்பவுத்திரமுங்
காட்டுமலரின்விழிமாதே கண்ணுமடைக்குங்கண்டாயே ௨௧

- காரசிலை

வேறு - காரசிலை

கல்லேனதுருசுவரிதாரங் கறித்தசூதகெந்தகமும்
நன்னேவிலிங்கவெண்காரம் நலமாய்வகைக்குக்கான்களஞ்சு
தன்னேர்வெள்ளைபெருக்கம்பூச் சாறுபலமுமொன்றாக
வின்னேர்மத்தஞ்சாற்வார்த்து வேண்டுந்துணியுலர்த்திடுமே ௨௨

உலர்த்தியெடுத்துப்பாங்காக வுலராரணத்தின்மேற்போடில்
அலர்த்துஞ்சூலைவெடிநாச மசுவைகிரந்தியழிகுட்டம்
மிலத்துவெழுந்தரத்தமதும் பெரியப்பணிச்சைபவுத்திரமும்
அலர்ந்தபூவின்குழலணங்கே ஆராரணமுமாறிடுமே ௨௩

சகலரணங்களுக்குந்தயிலம்

ஆறுத்சூதகாந்தகெந்த மடவேதாரமிலிங்கமுடன்
வேருவகைக்குப்பலங்காலாய் விதமாய்ப்பருத்திப்பால்விட்டு
சாருமென்னிணையண்ணை தனைச் சதிராய்விடுத்துத்தானூட்டிக்
காரத்துணியில்தனிலூட்டிக் கடியாரணத்தின்மேற்போடே ௨௪

போட்டவுடனேமுளைகளறும்பொருந்துமுதிரமாங்கிசங்களறும்
காட்டுமுளைகளாணியறுங் கடியப்பிளவைப்பவுத்திரமும்
நாட்டும்பெரியகுட்டமுடன் நளினமாசுத்திறந்துவிடும் [மே
கூட்டம்பெரியரணங்களெல்லாங் கோவென்றொடுந்துபோய்விடு

சகலரணங்களுக்கும் உள்ளுக்குக்கொள்ளுந்தயிலம்

நாவிருகங்கெந்தகமுங்கலமாய்வெள்ளையரிதாரம்
மேவுமிருநார்வெண்காரம் மிகமாங்கந்ரசமியுடன்
தாவுகதுத்தங்குருசுடனே தரிக்குமிரசமேருஇவையும்
பாவுமகெவுரிகாளகமும் பரிவாய்வகைக்குத்தான்கழஞ்சே ௨௬

மிரதமென்பது - இலிங்கம்

கனஞ்சேசாதிலிங்கமுடன் கதிக்கவிந்துப்புடன்கூட்டி
வனஞ்சேருக்கனபால்வார்த்துவகையாலொருநாளரைத்தபின்பு
கனிஞ்சசதுரக்கள்ளிப்பால் தானேதினமும்பண்டாக
அனஞ்சேர்கல்வமீதிட்டு வரைப்பாயாருசாமந்தானே ௨௭

தானேயரைத்துத்துணிபூட்டித் தயவாய்த்திரியுந்தான்செய்து
மானேமாறு நகமெல்லவேமயிலமதுக்கத்தாயத்துதானேவாங்கி
தேனேவிளங்கெப்பத்தவைக்கத்திரமாய்க்கயிலந்தான்சொரியும்
கேனேதப்பிதவிலைடத்துக்கொடுக்கணவிடையுள்ளுக்கே ௨௮

உள்ளேகாளதான்பணிரெண்டு வுண்டபோதேரணங்களெல்லாம்
தள்ளாச்சிலேபுந்தான்மாறும தணிபாரணமுந்தான்றீரும
விள்ளோக்கந்தன்றீதி தேவ் விரிந்தசகையுமுளைநாசம்
வள்ளோவரோர்தாமுமைக்கு வகுத்துவுரைத்தபடியிதுவே ௨௯

வேறு -வெள்ளைக்காரச்சிலை

வெள்ளைகெவுரிகுங்கிலியம் வெள்ளச்சவகவகையொன்று
தள்ளாமருந்துவெள்ளைத்துத் தணிசேவ்வரைத்து பொடியாக்கி (மு
வெள்ளைத்துணியுந்தமன் போட்டு விங்கபொடியாய்த்தான்செய்
தள்ளுந்தகையுமுளைகறையுந் தாக்கும்வெள்ளைக்காரமிதே ௩௰

கறுப்புக்காரச்சிலை

வந்தகெவுரிவரிதாரம் வகையாஞ்சுண்ணமுடன்றுத்தம்
அந்தமிருகார்வகையொன்று வரியவெள்ளைக்குங்கிலியம்
இந்தப்பலந்தானதுதானும் விளங்கத்துணியிற்சமனாக
[illegible] ௩௧



வேறு

கொடியாம்வெள்ளையரிதாரங் கெவுரிமஞ்சள்மிருதாரும்
வெடியாம்வகைக்குக்களஞ்சொன்று வேலமெடுத்தெஞ்சமனாக
படியாம்பச்சைக்குங்கிலியம் பலமுந்துணியும்சமனாக
அடியாவிடித்துப்பொடியாக்கி யடங்காரணத்தின்மேற்போடே ௩௨

பொன் சிகப்பு

மஞ்சள்வசம்புசுட்டகரி வசாய்லேம்வெள்ளையுடன்
அஞ்சமிருதார்தலையோடு வட்டாயிதுவுஞ்சமன்கூட்டி
தஞ்சமான பழந்துணியுந் தணியேவிடித்துப்பொடியாக்கி
மஞ்சள்வர்ணமாணப்பிள்ளை வாங்குஞ்சிகப்புக்காரமிதே ௩௩

வேறு - பொன்சிகப்பு

மங்குலனையபூங்குழலாய் வழுக்குமிதனைக்கேட்டிணர்வாய்
லிங்கங்காவிச்சிலைமஞ்சள் எருக்கும்வெள்ளைச்சங்குடனே
தங்கும்வெள்ளைமருதம்பட்டை தானேபழைப்பழந்துணியும்
பொங்கவிடித்துப்போர்முளையிற்போடக்கறையும்பொற்சிகப்பே

குளிர்ந்த பச்சைக்காரம்

முருகார்செவுரிதாரமொடு முடுகும்வெள்ளைத்துரிசுடனே
பருகவெள்ளைமருதிதுவும் பாங்காய்ந்துணியுஞ் சமனாக
நொருங்கவிடித்துப்பொடியாக்கி நரையுஞ்சட்டிப்புத்திரமும்
அருங்காமூலங்குட்டமெலா மகலும்பச்சைக்காரமிதே ௩௪

வேறு-வெள்ளக்காரம்

சங்குகபால்வெள்ளையுடன் சாருமருதுவெள்ளையிது
மங்கதெழுந்ததுணிசமனாய் வழுங்கக்கூட்டிப்பொடியாக்கி
தாங்காதெரிவுநீர்வழிவுந் தயங்குபிளவைப்புத்திரமும்
எங்கிப்பரங்கியெரிசூலை யேகும்நீராப்போருமிதே ௩௫

வேறு - பச்சைகாரம்

முடகமிருதார்சங்குமஞ்சள் முடுகுங்சுறுத்தகுங்கிலியம்
அடவாய்வெண்மைத்துணிச்சமனா யடங்கவிடித்துப்பொடியாக்கி
மடங்காதெருங்கபரங்கிபுரத்து மாளாப்பிளவைப்புத்திரமும்

### மஞ்சட்காரம்

துத்தங்காவிமஞ்சளுடன் தலங்குஞ்சங்குதலையுடனே
அத்தகுன்னங்குங்கிலிய மானதுணியுஞ்சமனாக
மெத்தவிடித்துவெரிரணத்தின் மேலேபோடப்பிளவைசிக்கி
செத்துச்சிங்கிப்பவுத்திரமுந் திரக்குளிருங்காரமிதே ௫௮

### வேறு - மஞ்சட்காரம்

சங்குமஞ்சளதலையோடு தயங்குந்தாரந்துத்தமுடன்
பொங்குங்கரியகுங்கிலியம் போற்றுந்துணியுஞ்சமனாக
மங்காவிடித்துப்பொடிசெய்து வலுமைகொண்டவெரிசிரங்கு
எங்கும்பரங்கியிருவெல்லா மேகுமஞ்சட்காரமிதே ௫௯

### வேறு - நீலக்காரம்

சங்குதுருசுதுத்தமுடன் தனித்தமருந்துவெள்ளையுடன்
பொங்குநீலஞ்சமனாகப் பொருந்துமவெண்மைத்துணிசமனாய்
பங்கப்படவேபொடியாக்கிப் பருத்துதுறந்தவெரிரணத்தில்
மங்கவிடவேவெரிசிரங்கு மாயுநீலக்காரமிதே ௬௦

### கறுத்த காரம்

மஞ்சள்வசம்புசுட்டகரி மதிக்குஞ்சங்குதலையோடு
மிஞ்சுதுத்தமொடுவெள்ளை வீரந்துணியுஞ்சமனாக
பஞ்சாயிடித்துப்பொடியாக்கிப்பவுத்திரபிளவைரத்தசிங்கி
அஞ்சப்படுத்துமுளைநோயு மகற்றுங்கறுத்தகாரமிதே ௬௧

### வேறு - வெண்காரப்பொடி

திடங்கேள்கெவுரிவரிதாரம் செப்புவீரம்வெண்மைதுத்தம்
இடங்கேள்காரஞ்சவுசென்ன மினியநீலமிருதாரும்
அடங்கேள்வெண்மைக்குக்கிலேயொடு தணியுந்துணியுஞ்சமனாக
வடங்கவிடித்துப்பொடியாக்கி வலிபகுட்டந்தனிற்போடே ௬௨

போடக்குட்டம்பதினெட்டும் பொருந்திச்சாகுந்தியிரேகும்
ஆமிரவமெலிக்கடியு மரியதேள்நாய்ப்பேய்நரியுந்
தோடக்கல்லுமுரட்சனையுந் துடிக்குமகட்டிக்கருணையுடன்



### பச்சைக் - காரசிலை

மஞ்சள் கெவுரி யரிதார மலைபா வெள்ளி மிருதாரும்
அஞ்சவகைக்கு யோரொன்று டோர் நீலஞ் சமனாக
மிஞ்ச கள்ளு வார்த்தரைத்து மெல்லியசீலை தனிலூட்டி
அஞ்சாமிடைகள் இமிர்தோடைப்படக்கும்பச்சைசிலையிதே ௬௩

### வேறு - கறுத்த காரசிலை

மஞ்சள்வசம்பு வெருக்கிலையு மதிக்கச் சுட்டுக் கரியாக்கி
அஞ்சுக்குருசுதுத்தமுட னரியகெவுரிவெள்ளைசங்கு
அஞ்சமுடத்தான்முலைப்பாலும் கையாந்தகரையதின்சாறுங்
கொஞ்சவரைத்துத்துணிதனிலே தடவிப்புண்ணிற்போடன்றே ()

நஞ்சேறவிசத்தின் பிணிதீரும் நடுக்கும்சண்டிப்புண்டீரும்
குன்றுத்திமிருத்தினவும்பனைபோம் கொடியசிரங்குமோடும்போம்
கன்றிபுடைக்குபுண்டீரும் கடியசொரியும் புண்களெலாம்
இன்றேபோவமென்றுசொல்லும்மிக்கறுத்த சிலைதனக்கே

### மஞ்சட்காரசிலை

தூதகெவுரிவீரமுடன் சொல்லுந்தாரமிருதாரும்
போதவெல்லிக்கடுக்காயும் புகழும்கற்கடகச்சிங்கியுடன்
பேதமில்லாமல்வகைக்களஞ்சு பெருத்தபெரியவண்டமதும்
கோதுபடவேயுடைத்துவெள்ளைக்கொண்டுரைவிட்டரையே ௬௬

அரைத்தசிலைதனிலூட்டி யடவாயெடுத்தசிலைதனை
உரைத்தவாணிதனிமுகாயி லுறவேயாறுக்குமுன்மையிதா
கரைத்துமுகாயுநீராகும் கடியவாணிதான்விழும்
மருத்துமுனிவர்தானுரைத்த வெண்மையட்சிலையிதே ௬௭

### வேறு - சிகப்புச்சிலை

சூதமிலிங்கமரிதாரஞ் சொல்லுங்கெவுரிமிருதாரும்
சீதக்காவிமன்சமனாய்ச் சேர்த்தேதேசிபழச்சாறும்
மாதர்தமதுமுலைப்பாலும் வார்த்துவரைத்துத் தனையெடுத்துறங்
கோதிந்துணியிற்றனிலூட்டிக் கொடியரணத்தின்மேற்போடே ()

போடேசண்டி நுறைப்பருவும் புகலற்கரியபிராவையுடன்
தோட்டப்புழுவால்வந்ததொரு துடுக்காமேழுபவுத்திரமும்
வாடக்குரோ தமேசெய்யும் வலியவானைக்கரணையெலாம்
சாடக்கிடமேயில்லையென நவின்றசிகப்புச்சிலொன்றே ௫௧

வெள்ளைக்காரசிலை

சங்குருதங்குங்கிலியந் தயங்கும்வெள்ளைத்துணிமோடு
எங்குஞ்சவுக்கன்னறைப்பு மிதமாய்முலைப்பால்விட்டறைத்துத்
தங்குந்துணியிற்றனிலூட்டித் தயங்கப்பிளவைத்தாளின்புத்தூ
மங்குஞ்சன்மேசனைமறுக்கும் வலியவெள்ளைச்சிலையிதுவே ௫௨

வேறு - நீலக்காரச்சிலை

வெந்ததலையுஞ்சங்குதுத்தம் வீரமுடனேவெண்மையுடன்
முந்ததாரஞ்சவுட்டுடனே மூர்க்கநீலஞ்சமனாக
பந்துமுலைப்பால்விட்டறைத்துப் பழையதுணியிற்றனிலூட்டில்
வந்ததிமிங்கரணைகண்டி மாற்றும்நீலச்சிலையிதுவே ௫௩

வேறு - புரைச்சதையுண்ணுந் திரி

துரிசுதுத்தம்பங்காளந் துலங்குஞ்சூதமரிதாரம்
அரங்குநீலகெந்தகமு மடரும்பச்சைவெட்டுடனே
இரமாயிலநீர்விட்டறைத்துத் தியங்கச்சிலைதனிலூட்டில்
அறங்கப்புரையின்சதையுண்ணு மரியதிரியையேற்றிவிடே ௫௪

முடுகும்-பச்சைத்தண்ணீர்

முருதார்கஞ்சகிமிளையுடன் முடுகுங்காந்தமரிதாரம்
திரமாயிலிங்கசெந்தூரந் திருந்துங்கெந்திச்சமனாக
அரமாம்வெள்ளைப்பலங்கூட்டி யறைத்துப்பொடியாய்தானாக்கி
உரமாய்ரணத்திற்பொடிபோட வோடுமெனவேவுரைத்திடுமே

சிகப்புத்தண்ணீர்

ஆராவமுதேயாரணந்தே யரியதிரியின்வகைகேண்மோ
கோராய்லிங்கஞ்செந்தூரம் நீலங்குங்கிலியஞ்சூதுடன்
தீராக்காவிமண்சிலைத் திருந்தும்வெள்ளைச்சமனாக



மேலாந்திரிநீரிற்றோய்த்து மெய்ச்சும்புலாயிற்றிரியூட்ட
ஆராரணமும்மெரிவடங்கும் அகண்டப்பிளவைபவுத்திரமும்
வேலாம்பாடாத்தோட்டைகையும்விளங்குங்காதெழிற்சிமேற்பருவும்
காலாங்காதச்சிகப்பிடவே கடியரணங்களாறிடுமே ௫௬

வேறு - முடுகு பாசைத்தண்ணீர்

முருதார்துருசுதுத்தமுடன் முண்டேகவுரிப்பாங்கியுடன்
அரிதாரம்வெள்ளைமஞ்சளுட னழகுநீலஞ்சமனாக
பெரிதாம்பச்சைவெட்டுடனே பேணிப்பலமுந்தானிரண்டு
அருகாமுந்திரிநீர்ப்படியு மடவாயறைத்துக்குப்பியிடே ௫௭

குப்பியிலிட்டநீர்தனைக் கொடியதுணியிற்றனிலூட்டில்
உப்பிவளர்ந்தபெருமுளையு முளைக்குங்காளாநுறைப்பருவும்
அப்பிசண்டிப்பாங்கிகுட்டமுசகாப்பிள்ளைப்பவுத்திரமுங்
கப்பிப்பச்சைக்கடுங்காரங் கண்டீர்தண்ணீர்க்குணமிதுவே ௫௮

வேறு - குங்குமத்தண்ணீர்

சவுடுகெவுரியரிதாரஞ் சாற்றுமஞ்சள்முருதாரும்
கவுடுவெள்ளைக்கற்பூரங் காணுங்குக்கிற்குங்கிலியம்
அடுமுன்றிரிநீர்தன்னைவிட்டு வறைத்துக்குப்பிதனிலேற்ற
தொடுத்தவாணிப்பிளவைகட்டிச் சொல்லுமஞ்சளீதுவே ௫௯

வேறு - நீலக்காரத்தண்ணீர்

காந்தஞ்சூதங்கெவுரிவெள்ளை கடிதாஞ்சீதம்பாங்கியுடன்
வாங்குஞ்சவுக்கன்னறைப்பு வகைக்கோர்களஞ்சுவாகுடனே
தாங்குந்நீலம்பலமொன்று தரியாப்பச்சைவெட்டுசமன்
வாங்குமுந்திரிமுட்டைச்சாற் றிடமாவறைத்துக்குப்பியிடே ௬௰

வேறு - கடுங்கார வெள்ளைநீர்

சுட்டதலையுந்தன்னறைப்புஞ் சுகமாம்பாங்கிவெண்மையுடன்
அட்டம்பெரியாளவாச்சார மடங்குநாச்சினாம்வெண்காரம்
இட்டஞ்சங்குநீருடனே திடமாய்ச்சமன் தான்பச்சைவெட்டு

வேறு - பச்சைநீர்

நீலங்கெவுரியரிதாரம் நிலக்குமஞ்சட்ருங்கிலியம்
ஆலங்குற்றகள்வார்த்து வறைத்துக்குப்பிதனிலேற்றி
சேலவெரிவுரணமாறுஞ் செவித்துஞ்சோகநாகமறும்
வாலக்கிரந்திமடிவாகும் வாகாம்பச்சைநீரிதுவே [illegible]

வேறு - குளிர்ந்தநீர்

சூதஞ்சன்குதலேயோடு சொல்லுங்காவிலிங்கமுடன்
ஆலந்துத்தங்கடுக்காயு மடவாய்க்கள்ளே விட்டறைத்து
மேவுங்குப்பிதனிலிட்டு விறைந்துவெரிந்தரணத்திலிட
பாரிற்சிவந்தகுளிர்ந்தநீர் பரிவாய்ரணத்தையாற்றிடுமே ௯௩

வேறு - குளிர்ந்தநீலநீர்

சூதங்கெந்திதலேயோடுஞ் சொல்லுந்துரிசுகுங்கிலியம்
அளவகைக்கோர்களஞ்சறையே வடங்குநீலஞ்சமஞக
கலக்கள்ளு ரிட்டறைத்துக் கடுகிக்குப்பிதனிலேற்றி
மேலாமெரியுரணமாறும் மெச்சுங்குளிர்நீர்நீலமிதே ௯௪

சங்குபடிகம்வெண்காரஞ் சாற்றுந்துத்தஞ்சாம்பிராணி
வெகுதகலேயும்வெண்குக்கில் விளங்குகள்ளே விட்டறைத்து
பொங்குங்குப்பிதனிலடைத்துப் பொரிந்துவெறிந்தரணத்திலிட
வங்குகுளிர்ந்தவெண்ணீரா யேற்றிரணத்தையாற்றிடுமே ௯௫

வேறு - குளிர்ந்த குங்குமத்தண்ணி

கஸ்தூரிமஞ்சட்சொல்லரிய கடியமுருதார்கடகமதும்
வேதக்கடுக்காய்துத்தமுடன் வெருண்டகள்ளே விட்டறைத்து
ஆதக்குப்பிதனிலடைத்து வடைவாயெரியுமிரணத்திலிட
போதமஞ்சட்தண்ணிபத்தா பொங்குநீருமிரணம்போமே ௯௬

வேறு - கறுத்த குளிர்ந்தநீர்

மஞ்சள்வசம்புசுட்டகரி மதிக்குஞ்சூதங்கெர்தகமும்
அஞ்சுஞ்சிலாசத்துமுட னடவாய்க்கள்ளேத்தான்விடுத்து
மிஞ்சியறைத்துக்குப்பியிட்டு மிடியாயெரியுமிரணத்திலிட



சர்வரணங்களுக்குரு - சிங்கித்தயிலம்

விருதார்சிங்குகெந்தகமும் மிகுந்தநீலஞ்சூதமுடன்
அரியசீனம்பரங்கியுட னகடுக்காய்த்துத்தமதும்
பருகவசம்புவுள்ளியொடும் பகரும்புங்கனெறியம்பால்
இருகயெரிக்குந்தேங்காய்நெய் இறமாய்க்கடுகுபதமறியே ௯௭

அறிந்துபதத்திலெடுத்துவைத்து வாராச்சண்டியூரிவிளைவைப்
பறிந்தபுரையும்பரிகிரந்திப் படாகப்பரங்கிபலாத்தோடை
எறிந்தசூலைபெரிவெடியன் மியங்கும்பவுத்ரமுதற்பிளவை
வறிந்தசிங்கிப்பச்சையதின் மதிக்குந்தயிலமிதுவாமே ௯௮

வேறு-சிங்கித்தயிலம்

கஞ்சாமிளக்காந்தமுடன் கடியசூதமரிதாரம்
பஞ்சக்குக்கலுடன்முயங்கும் பகரும்பச்சைவெட்டுடனே
அஞ்சும்வசம்புவுள்ளிவெள்ளை யடவாய்வகைக்குக்களஞ்சொன்று
வெஞ்சம்புங்கநெறியம்பால் மேலாமெண்ணெய் படியொன்றே

எண்ணெய்பதத்திற்பார்த்தெடுத்து விரங்காச்சிங்கிப் பிளவைர(ணம்
அண்ணேபுத்துவறையாப்பு மாராரணமகநீராகும்
கிண்ணேபடாகம்பவுத்திரமும் விறைந்தசூலைவெடிநாசம்
கண்ணேபெருமையென்சொல்வேன் கடிதாஞ்சிங்கித்தயிலமிதே

வேறு - பங்காள பச்சைத்தயிலம்

கொல்லுஞ்சூதங்கெந்தகமுங் கூறுந்தாரந்துரிசுதுத்தம்
அல்லுங்குக்கிலயினியுட னடங்காக்காசுகட்டியுடன்
சொல்லும்படிகவங்காளஞ் சுகமாமருந்துவெள்ளையுள்ளி
வெல்லும்வசம்புமஞ்சளுடன் வேண்டும்வகைக்கோர்களஞ்சாமே

ஆமேயெள்ளினெண்ணெயுட னடர்ந்ததேங்காய்ப்பால்புங்கன
சாமேநொச்சியம்பாற்படியுஞ் சதைக்கவெரித்தயிலமுடன்
போமேபுண்ணும்புரைமாற்றும் போந்தபுண்ணும்பவுதிரமுஞ்

வேறு - பச்சைத் தயிலம்

பச்சைவெட்டிவேர் மஞ்சள் பகருங் கந்தகச்சிங்கியுள்ளி
கொச்சிக்கடுக்காய்துன் திப்பிலிதைக் கூறுந் துத்தந்துரிசுடனே
அச்சருகமுருகாரு மடர்ந்தகிலமரிதாரம்
பச்சவசம்புகொறுக்காப்புளியும் வேதகமாய்களஞ்சுதானென்றே

ஒன்றேவெள்ளிவெண்ணெய்ப்படி
வுகந்தமுலைப்பால் குமரிச்சாறு
அன்றேவெரித்து ரணத்திலிட
வடங்காவெரிவு மதனீர்போம்
சென்றேவிளவைப் புத்துடனே
சேரும்புத்திர பனிச்சையறும்
வென்றேபச்சைத் தயிலமிது
விளம்போல்விளைக வுர்த்திடுமே ௬௩

புரைகள் - மாறத் தயிலம்

தும்பைமுருங்கைதுளசியிலைத் தோற்றும்புங்கனுனாமுருக்கு
வம்பைக்கையான் குமரிவில்லைவடவாய்வகைக்கோர்ப்படியிடித்துக்
கம்மைக்குக்கிற்பாய்ப்பிரண்டி தனித்தருகங் கெந்தகமும்
வம்மைத்துரிசுத்தமுடன் வருந்திகளஞ்சுவெண்ணெயிடே ௬௪
கலந்நெய்ப்படிக்குச்சாறப்படியு மிதமாய்ப்புங்கன்பாலுமுக்கு
டலந்நெய்கீலம்பமொன்று மயங்கவெரிதப்புகாயிலிட
கண்ணச்சூலைபுரைமாறுங் கதித்தபிள்ளைத்தாள்புத்தும்
மண்ணும்படாகபவுத்திரமும் பறிக்கும்பச்சைத்தயிலமிதே ௬௫

வேறு - குங்குமத்தயிலம்

மஞ்சள்வசம்புமூன்றுடனே மதிக்குக்காரங்குதமுடன்
பஞ்சசுத்தம்படிகாரம் பகரும்பச்சைவெட்டிடனே
மஞ்சுமுருகார்கந்தகம் மெதிர்த்தவசம்புவுள்ளியுடன்



ஒன்றேவெண்ணெய்ப்படியாக வோங்குமுலைப்பால்படியொன்று
நன்றாயெரித்துரணத்திலிட நலிவார்பிள்ளைப்புரைமாறும்
என்றேயிருந்தரணமாகி லெதுக்குந்தயிலமாகிவிடும்
அன்றேமஞ்சட்டயிலமதை யடவாய்நிந்துரணத்திலிடே ௬௬

சர்வரணங்களின் புரைமாற்றுங் குமரித்தயிலம்

கொச்சியழிஞ்சிநறையிலையுமருகருமுருங்கையவிரிசங்கு
வைச்சக்கையர்ந்தகரைத்தூளசி வகைவிச்சாதுமையமேனியிலை
அச்சவகைக்கோர்தாள்பிடியா யக்னறுகுதங்கெந்தகமும்
நச்சுங்கொடிவேலிவாலுமுறைவ கண்ணார்நுக்கரதுரிசே ௬௭
அத்தம்வகைக்கோர்களஞ்சாகத் துவைத்தசாறும்படிவெண்ணெய்
அத்தங்குமரிச்சாறும்படியுமடவாயெரித்துரணத்திலிட
வத்திதினமுமுக்களஞ்சு வாகாய்கொள்ளப்பவப்புண்ணும்
மெத்தமேலுக்காணிட்டு மேல்குமரித்தயிலமிதே ௬௮

வேறு - விதத்தயிலம்

சங்குதுளசியருவி சாரணைகொன்றைகொடிவேலி
புங்கனுனாவுமவிரியிலைப் பெருங்குங்கையான்துத்தியிலை
துங்கக்துரிசுகெந்திதுத்த மடருஞ்சூதமரிதாரம்
மங்கைப்படிகமணிமனுசன் வாகாவெண்ணெய்மருந்திதுவே ௬௯
வேட்டியெரிக்குந்தேங்காய்நெய் விதமாயரிவைமுலைப்பாலில்
கூட்டியேபோதுரணத்திலிடக் கொடியபுண்ணும்பிள்ளையறும்
சூட்டும்சிங்கித்தோடகையு மடங்காப்பவுத்ரமதுபோகும்
மாட்டியேர்காழிகைரணத்தின் வகைசேர்தயிலமிதுவாமே ௭௦

சர்வ ரணங்களுக்குமேற்பூச மருந்து - கலிவிருத்தம்

முருங்கையிலையொடு மின்னேயுந்தும்பையும்
அருங்கைநிலிய மத்தியும்வேப்புடன்
பெறுக்கஞ்செருப்படி பேயத்திவேலியும்

114323

சர்வரணத்திற்கு முட்கொள்ளவும்
மேற்பூசவும் பவுத்திரத்திற்கு
பற்றிடவு மருந்து

வெளுத்தவெண்ணெயும் வெண்ணெச்சிப்புங்குடன்
வளித்தபூவும் வருந்திவகையொன்று
இளித்தசாற்படி யெள்ளெண்ணெய்தான்படி
பளிக்கைகதுத்தமும் பாகுடன்கெந்தியே ௮௫

ஆனகுதம்வெட்பாலைபரங்கியு
மாணசெந்தூரமாதவலிங்கமும்
காணவேக மடிக்கடிநீபத்தில்
பாணமாயெடுத் திருநேர மருந்திடே ௮௬

வருந்திருலை வரும்வெடிப்பேரக்கிடும்
புருந்துதொன்னடையும் போற்சனைசிங்கியும்
மதிரந்தியு மாருதபுண்களும்
பதியாங்கியும் பகர்குஷ்டமேகுமே ௮௭

விக்கத்திற்குப் பற்று-வேறு-விருத்தம்

அபின்கடுகுபெருங்காய மறியவாளம்கரும்பவளம்
மருவுமெருக்கன்சாற்விடுத்து வாட்டியறைத்துமேற்பூச
கருதுங்கடிகைபிளவைகட்டி கடியசூலைப்பவுத்திரமும்
அடியில்வீழ்ந்துமடிந்தேகுமி யகன்றேவழியும்பற்றுமே ௮௮

வேறு - வகைப் பற்று

கடுபவழம்கருஞ்சீரகம் கடிதாமயிலிபெருங்காயம்
மடிவாம்நாபிவெள்ளையுள்ளி வகுத்தகொடிவேலிவகை பொன்று
திடமாய்கள்ளிச்சாற்விடுத்துத் திறமாயறைத்துமேற்பூச
அடிவாப்பிளவைபவுத்திரமு மானக்கட்டியறையாப்பே ௮௯

வேறு - வீக்கத்திற்கு கொடும்பற்று

ஆதமிருவிகெந்தகமும் சுகமாம்காயம்வாளமுடன்
வேதம்பெருக்ககாயமுடன் விதமாம்திருகுகள்ளிச்சாற்
மாதம்கட்டிபெரும்சூலை வகைசேர்கட்டிமேல்வீக்கம்



வேறு - வீக்கங்களுக்குப்பற்று

ஆதமிருவிகெந்தகமுஞ் சுகமாங்காயம்வாளமுடன்
ஆதிகரியபவளமுட னபினிகரியசீரகமும்
வாதிலகைக்குமேதியின்பால் வகையாய்க்கட்டிசூலையறும்
மேதிவளர்ந்தபிளவைகட்டி விதமாய்குழம்பற்றுமே ௯௧

வேறு - விதப்பற்று

இருவிலிங்கம்மரிதார மிதமாங்குக்கிற்கரும்பவளம்
குருவாமபினிபெருங்காயங் கோடியறைக்குத்திருகுகள்ளி
அருவாம்பிளவைபவுத்திரமு மானகட்டியறையாப்பும்
கருவாஞ்சூலைபதினெட்டுந் தாண்டவடிக்குப்பற்றுமே ௯௨

சகலவிதக்கட்டிகளுக்குப்பற்று

கடுக்காய்சுக்குகரும்பவளம் கடியகாபிபெருங்காயம்
முபிக்காமபினிகொடிவேலி முத்தவாளமெருக்கன்வேற்
பெருக்கவறைக்கவெருக்கன்பால் பேசும்பிளவைகட்டியறும்
அருங்கின்மிகுந்தகட்டியெலாமடங்குங்கொடிவேர்பற்றிதுவே ௯௩

வேறு - விதப்பற்று

மத்தைகவிதையுங்கொடிவேலி மதிக்குஞ்சேமாமஞ்சிழம்பருப்பும்
பற்றேபமினிகஞ்சாவை பரிவாய்பூசப்பிளவையொடு
மெத்தவல்லகட்டியெல்லாம் வெருண்டேயோடும்பற்றிதுவால்
வெற்றிசேர்பூண்முலையாளேவிருப்போடவர்க்குமுரைத்தேனே

உள்ளுக்குமெண்ணே

சதுரக்கள்ளிகொடிவேலி சார்ந்தவெருக்கன்கொடிக்கள்ளி
அதிருங்வேலியமுக்காவு மரியவகைக்குவேற்சமனாய்
ஆதங்கெந்திசெந்தூரஞ் சுகமாயோரண்டவெண்ணெபடிப்
போதவெரித்துவுட்கொள்ளிற் பேசகாரணங்கள்போய்விடுமே

சகலவிஷவீக்கங்களுக்குப்பற்று

கல்லெழுந்தகண்ணாம்புங் கதிக்குமுருங்கைப்பட்டையுடன்
உள்ளிவசம்புபேய்பீர்க்கைக்குற்றவிலையோடெருக்கன்பால்
கொல்லுங்கொல்லாய்பேய்ப்பீர்க்கன் குவளையறையாப்பு
நில்லென்றுரைக்குநிற்காது நிலைவிட்டோடும்நிச்சயமே

இரணங்களுக்குப்பிளாஸ்திரி-எழுசீரடி விருத்தம்

உடையுமே ரத்தமுடன் சீழும்போகும்
    வுள்வீச்சுபுறவீச்சு யாவும்போகும்
இடைமேரம்புவலியிசிவும்போகும்
    பிணக்மாய்பிளாஸ்திரியொன் றியம்பக்கேளு
கடையுமெருங்கிலியபலந்காறென்று
    கருவானவெண்ணை தனிற்கடைந்தாயானல்
அடையுமேவெண்ணையது திறளும்பாரு
    வரனுரைத்தாரன்புடனே யெனக்குத்தானே   சுள

சகலவிதரணங்களுக்கும் - மூலாம்

திண்ணமாமிட்மருந்துதனையகற்றி
    திறமானகருப்பொன்று சேர்ந்துகேளு
நண்ணமாலிங்கமொடுதுத்தநாகம்
    நலமானசிங்கியுடன் கெந்திதானும்
வண்ணமாக்குங்கிலியரசகற்பூரம்
    வளமானகடுக்காயுமாசிக்காயும்
கின்னமாயிவையொன்றும்பிசகிடாது
    சேரிடையாய்ச்சமனிறுத்துப்போட்டிடாயே   சுஅ

போட்டிடுவாய்பசுவினது வெண்ணை தன்னிற்
    பொலிவாகமூன்றுநாளரைத்துமேதான்
காட்டிடுவாய்நற்பனிநீற்கொண்டுதாக்கிக்
    கருவானமூலாமதனையரைத்துமேதான்
கிட்டிடுவாய்பரணை தனிலடக்கஞ்செய்து
    கீனிலத்திமாந்தருக்குரணங்கட்டிருந்தால்
மூட்டிடுவாய்புண்புரைகளகன்றுபோகும்
    வுத்தமனேமுனிவலத்துவண்மைபாரே   சுக

சர்வரணங்களுக்கு - மூலாம்

கலிவிருத்தம்

தெய்வமணக்கமழும்பூங்குழலினளே
    திரைகடல்சூழ்வையமுறுமாந்தர்கட்கு
கைதவந்தாலெந்நேக்குமரணங்கட்கெல்லாம்
    களிம்பொன்றுசொல்லுகிறேன் காசினிமீது
மைதிகழுமாசிக்காய்கடுக்காய்துத்தம்
    வளமானலிங்கமொடுகெந்திசிங்கி
பைரவப்பட்டமனையவல்குலாளே



தாக்கியேகுங்கிலிய மதனைடொப்பாய்
    சொல்லரியபசுவினது வெண்ணெய்தன்னில்
தாக்கியேமூன்றுநாள் வரையிலாட்டித்
    தன்னுருக்கும்பனிநீரால் கழுவிக்குற்றம்
போக்கியேயிரண்டுவருஞ் சமயங்கண்டு
    பொற்புடையாய்பரணிதனிற் பதனஞ்செய்து
வக்குமுறுவோர்புண்கட் கேற்றுவாயேல்
    வன்றுணைந்தரியேனென் றேகுந்தானே   ௱௧

தடிப்புமுதலிய அரையாப்புகள்
கரைவதற்குக்கட்டு

மட்டவிழ்க்குழலாளே மண்மேலுற்ற
    மாந்தர்களின்விளைவலியா மரைப்புக்குக்
கட்டொன்றுசொல்லுகிறேன் காசிகட்டி
    கருதரியசெங்கொட்டைக் காடிகாரம்
மட்டில்லாக்கொடிவேலி வையமீது
    வளமானபனைவெல்ல மிதனைச்சேர்த்து
சட்டமுடனமூன்றுநாள் வரையில்மானே
    கட்டிகொண்டிருக்குவையேல் தணியுந்தானே   ௱௨

தானைவறையாப்பின் ரணத்துக்காங்கே
    தாரணியிற்சிலையொன்று சாற்றக்கேன்மோ
தேனூருங்குழலாளே கல்வந்தன்னிற்
    சிறப்பானகுங்கிலியம் பலந்தானொன்று
ஆனென்றபசுவெண்ணை தன்னைச்சேர்த்து
    ஆரணங்கேயாட்டியதை யெடுத்துக்கொண்டு
நானென்றரணமீது போடுவாயேல்
    ஞாலமதிலிருந்தவிடம் நவிசாப்போமே   ௱௩

கொறுக்குமுதலிய புண்களுக்கு - மூலாம்

நவிலுகிறேன் கொறுக்குமுதற் புண்கட்கெல்லாம்
    நலமானமூலாமொன்று மானேகேன்மோ
புவியில்வருமிருதாரசிங்கு கெந்திபூரம்

கவிசடையகளஞ்சொன்று சமனாய்த் தூக்கி
தாரணியிற்றேங்காய்நெய் தன்னிலாட்டி
அவனிசொலுநன்னீரா லேழுவாட்டி
யலம்பியேயாறும்புண் தனக்குப்போடே ௱௪

பருவுகளுக்குப்பத்து

கண்டனைநற் கருங்கல் லரைத்தேயதில்
அண்டுநல்லெல்லாம் அவ்விடைதூக்கியே
கொண்டுமேகூட்டி ரணமதிற்பத்திடில்
பண்டுமீறும் பருவுண்டாக்கோடுமே ௱௫

ஓடிமரஞ்சிமுகுளன் முனையம்றபின்
காடுமேமுருங்கை யிலைச்சாற்பிழிந்
தோடுமெல்லிய சீலையிலூட்டியே
போடுமருந்து பொரிந்திடச்சாடுமே ௱௬

114383

வெட்டுபுண்ணுக்கு

சாடுங்கோனடக சாலையிலைபரி
தேடும்வேண்டியே தேயிருநேரமும்
மாடுங்கையிறல் தாங்கிமாந்தநாள்
போடுமேல்வெட்டு புண்ணாறிக்கண்டதே ௱௭

அக்கினிபிசாஸ்திரி

பொய்யாதமரர்க்கு புகலுவேன்வாகடம்
அய்யாபிசாஸ்திரி அறைவேன்வகையுடன்
மெய்யாகவீர மிருகனிருபது
நெய்யாவிளக்கெண்ணை துவளவரைத்திடே ௱௮

அறைத்துசல்லாவி லழுந்திடப்பூசியே
விரைத்தகிராந்திப்புண் வீழ்ம்ரணத்திற்கு
உரைத்தபடியாக உறுதியாய்ப்பூட்டிடிச்
கரைத்தரணங்களும் காணும்லோடுமே ௱௯